**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 76/2022**

பெயர் : வீரையன் P.W.2.

த/பெ. : பெருமாள்

தேதி : 24.04.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் காவேரி என்பவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிக்க வாதியின் வழக்கறிஞர் கூறியதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் கூறினார்கள் என்றால் வாதியின் வழக்கறிஞர் தான் கூறினார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதியின் மகன் ஜெயக்குமார் எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கைலாச ஐயரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கைலாச ஐயரை நான் எப்போது பார்த்தேன் என்றால் 1986 ம் ஆண்டு மார்ச் மாதம் கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தபோது பார்த்தேன். கைலாச ஐயரை அதற்கு பின்னர் நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணம் கிரய ஒப்பந்தம் செய்த ஆவணம் ஆகும். அதில் உள்ள விபரங்கள் யாரால் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. கிரய ஒப்பந்த ஆவணம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. கிரய ஒப்பந்த ஆவணத்தில் கைலாச ஐயர் எத்தனை பக்கங்களில் கையெழுத்து போட்டார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் கையெழுத்து போட்ட ஆவணம் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. கிரய ஒப்பந்த ஆவணத்தில் என்னிடம் எங்கு வைத்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றால் பட்டமங்கல தெருவில் கைலாச ஐயர் வாழ்ந்து வந்த வீட்டில் வைத்து வாங்கினார்கள். அப்போது அங்கு யார்யார் இருந்தார்கள் என்றால் நானும் என்னுடன் மற்றோரு சாட்சியும், கைலாச ஐயரும் இருந்தோம். இந்த மூவரை தவிர வேறு யாரேனும் அங்கு இருந்தார்களா என்றால் அதை நான் சரியாக கவனிக்கவில்லை. மேற்படி கிரய ஒப்பந்த ஆவணத்தில் வாதி காவேரி கையெழுத்து போட்டதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால்

பார்த்தேன். மேற்படி கிரய ஒப்பந்த ஆவணத்தில் கைலாச ஐயர் கையெழுத்து போட்டதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. அதனால் கைலாச ஐயர் கிரய ஆவணத்தில் எந்த தேதியில் எங்கு வைத்து கையெழுத்து போட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது வயது 67 ஆகும். கிரய உடன்படிக்கை சமயத்தில் எனக்கு எத்தனை வயது என்றால் 27 வயது இருக்கும். கிரய உடன்படிக்கை ஏற்பட்ட தேதியில் கைலாச ஐயருக்கு என்ன வயது இருக்கும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் மகன் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.